இன்றைய செய்தி நாளைய வரலாறு



# முரசொலி

Murasoli

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 284 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – வைகாசி 11 – வியாழக்கிழமை 25 மே 2023 – மதுரை 12 + 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 284 : Thiruvalluvar Year - 2054 - Vaikasi 11 - Thursday 25 May 2023 - Madurai 12+8 Pages ₹ 5.00

### தமிழ்நாட்டில் முதலீடுகள்: உலகின் மிகச் சிறந்த தொழில்நுட்பங்களைக் கொண்ட

# சிங்கப்பூர் நிறுவனங்களுடன் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆலோசனை!

## தொழில் நிறுவன தலைமைச் செயல் அலுவலர்களைச் சந்தித்துப் பேசினார் முதல்வர்!

**சிங்கப்பூர், மே 25 -**

**சிங்கப்பூர் நாட்டு தொழில் நிறுவனங்களின் தலைமை செயல் அலுவலர்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சந்தித்து தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகள் மேற்கொள்வது குறித்து ஆலோசனை நடத்தினார்.**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுடன் தமிழ்நாட்டிற்கு உள்ள பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகளை மேம்படுத்தும் வகையிலும், சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாடு 2024க்கு அழைப்பு விடுக்கும் வகையிலும், தமிழ்நாட்டிற்கு முதலீடுகளை ஈர்க்கும் நோக்கத்திலும், சிங்கப்பூர் மற்றும் ஜப்பான் நாடுகளுக்கு அரசு முறைப் பயணம் மேற்கொள்வதற்காக 23.5.2023 அன்று சென்னையிலிருந்து சிங்கப்பூர் புறப்பட்டு சென்றார்.

நேற்று (24.5.2023) சிங்கப்பூர் நாட்டிற்கு சென்ற தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் Temasek, Sembcorp, CapitaLand ஆகிய நிறுவனங்களின் தலைமை செயல் அலுவலர்களை சந்தித்துப் பேசினார். அப்போது தமிழ்நாட்டில் தொழில் தொடங்குவதற்கு நிலவும் சாதகமான சூழ்நிலையை எடுத்துக்கூறி, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகள் செய்திட வேண்டுமென்று கோரிக்கை விடுத்து, சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவும் அழைப்பு விடுத்தார்.

**டமாசெக் நிறுவன தலைமை செயல் அலுவலருடன் சந்திப்பு!**

டமாசெக் (Temasek) நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் தில்ஹான் பிள்ளை சந்திரசேகரா அவர்களுடன் தமிழ்நாடு முதல்வர் அவர்கள் சந்தித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.5.2023) சிங்கப்பூர் நாட்டின் செம்ப்கார்ப் (Sembcorp) நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் கிம்யின் வாங்க் அவர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகள் செய்வது குறித்துஆலோசனை மேற்கொண்டார். இக்கூட்டத்தில், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ். கிருஷ்ணன், சிங்கப்பூர் நாட்டிற்கான இந்திய தூதர் பெரியசாமி குமரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (24.5.2023) சிங்கப்பூர் நாட்டின் டமாசெக் (Temasek) நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் தில்ஹான் பிள்ளை சந்திரசேகரா அவர்களை சந்தித்து, தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகள் செய்திட வேண்டுமென்று கோரிக்கை விடுத்து, சென்னையில் 2024 ஜனவரி மாதம் நடைபெறவுள்ள உலக முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்து கொள்ளவும் அழைப்பு விடுத்தார். தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா, தலைமைச் செயலாளர் முனைவர் வெ.இறையன்பு, தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் எஸ்.கிருஷ்ணன், சிங்கப்பூர் நாட்டிற்கான இந்திய தூதர் பெரியசாமி குமரன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

இச்சந்திப்பின்போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், டமாசெக் நிறுவன தலைமை செயல் அலுவலரிடம், இந்தியாவில் தென் பகுதியில் அமைந்திருக்கும் தமிழ்நாடு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி உற்பத்தியில் தெற்காசிய நாடுகளிலேயே மிக வேகமாக வளர்ந்து வரும் மாநிலமாக திகழ்கிறது என்று தெரிவித்தார்.

### தமிழ்நாட்டில் தொழில் முதலீடுகள் செய்ய ஆர்வமாக உள்ளோம்! முதல்வர் மு.க.ஸ்டாலினிடம் தொழிலதிபர்கள் உறுதி!

டமாசெக் நிறுவனம் தமிழ்நாட்டில் காற்றாலை உற்பத்தியில் ஏற்கனவே முதலீடு செய்துள்ளதற்கு தனது நன்றியை தெரிவித்துக் கொண்ட முதலமைச்சர் அவர்கள், தமிழ்நாட்டில் ஏற்கனவே உள்ள காற்றாலைகளை வலுப்படுத்தவும், புதிய கடல் சார்ந்த காற்றாலைகளை நிறுவவும் டமாசெக் நிறுவனத்தை கேட்டுக் கொண்டார்.

தற்போது இளம் தொழில் முனைவோர்களை தமிழ்நாடு அரசு ஊக்குவித்து வருவதால் Startup நிறுவனங்கள் பல்வேறு புதிய தொழில்நுட்ப பிரிவுகளில் புதிய தொழில்களை தொடங்கி வருகிறது. இந்த Startup நிறுவனங்களில் டமாசெக் நிறுவனம் முதலீடு செய்திட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

இந்தியாவின் மொத்த உணவு பதப்படுத்தல் துறையில் தமிழ்நாடு தற்போது 8 சதவீத பங்களிப்பை வழங்குகிறது என்றும், தமிழ்நாடு அரசு உணவு பதப்படுத்தும் தொழில் பூங்காக்களை நிறுவுவதில் கவனம் செலுத்தி வருவதால், அவற்றில் டமாசெக் நிறுவனத்தின் முதலீடு தமிழ்நாட்டின் வேளாண் வளர்ச்சிக்கும், சிங்கப்பூரின் எதிர்கால உணவு பாதுகாப்பிற்கும் பெரும் உதவியாக இருக்கும் என்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தார். மேலும், தமிழ்நாட்டில் Fintech city என்ற நிதி நிறுவனங்களுக்கான தனியான கட்டமைப்புகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது என்றும், அவற்றிலும் டமாசெக் நிறுவனம் முதலீடு செய்திட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

அதற்கு டமாசெக் நிறுவன தலைமை செயல் அலுவலர் அவர்கள், தமிழ்நாட்டில் மீன்பிடி சார்ந்த தொழில் துறைகளிலும், உணவுப் பதப்படுத்தும் துறைகளிலும் தங்கள் நிறுவனம் முதலீடு செய்வதற்கு ஆர்வமாக உள்ளதாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களிடம் தெரிவித்தார்.

**செம்ப்கார்ப் நிறுவனம்!**

செம்ப்கார்ப் (Sembcorp) நிறுவனத்தின் தலைமை செயல் அலுவலர் கிம்யின் வாங்க் அவர்களுடன் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சந்திப்பு.

இச்சந்திப்பின்போது, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் உலக அளவில் செம்ப்கார்ப் நிறுவனம் சிறப்பான இடத்தை வகிக்து வருவதற்கு தனது மகிழ்ச்சியை தெரிவித்துக் கொண்டதோடு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தியில் தமிழ்நாடு இந்தியாவின் மிக முக்கியமான மாநிலம் என்றும், எரிசக்தி தொடர்பான பல்வேறு பிரிவுகளில்

தொடர்ச்சி 4ஆம் பக்கம்

## “சிங்கப்பூரில் முதலமைச்சர்”

ட்விட்டரில் டிரெண்டாகும் ஹேஷ்டேக்



சிங்கப்பூர், மே 25 –

ட்விட்டரில் “சிங்கப்பூரில் முதலமைச்சர்” என்ற ஹேஷ்டேக் டிரெண்டிங் ஆகி வருகிறது.

புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்கவும், உலக முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு அழைப்பு விடுப்பதற்காகவும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் சிங்கப்பூர் புறப்பட்டுச் சென்றார். நேற்று சிங்கப்பூரில் பல்வேறு தொழில் முதலீட்டாளர்கள் மற்றும் தொழிலதிபர்களைச் சந்தித்து ஆலோசனை மேற்கொண்டார்.

இந்நிலையில், சிங்கப்பூர் சென்றுள்ள முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், பல முன்னணி நிறுவனங்களின் தலைமைச் செயல் அதிகாரிகளை சந்தித்துப் பேசி வருகிறார். சிங்கப்பூர் பிரதமர் லீ சியன் லூங் மற்றும் அமைச்சர்களையும் அவர் சந்திக்க உள்ளார்.

இந்நிலையில், ட்விட்டரில் “சிங்கப்பூரில் முதலமைச்சர்” என்ற ஹேஷ்டேக் டிரெண்டிங் ஆகி வருகிறது.

### குடியரசுத் தலைவரை அழைக்காமல் புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தை பிரதமர் திறப்பதற்கு

# தி.மு.க. உள்ளிட்ட 19 எதிர்க்கட்சிகள் விழாவை புறக்கணிப்பு!

## மோடியின் எதேச்சதிகாரம் என கட்சித் தலைவர்கள் கண்டனம்!

**புதுடெல்லி, மே 25 -**

**குடியரசுத் தலைவரை அழைக்காமல் புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தை பிரதமர் திறப்பதற்கு, தி.மு.க. உள்ளிட்ட 19 எதிர்க் கட்சிகள் புறக்கணிப்பதோடு, ‘இது மோடியின் எதேச்சதிகாரம்’ என கட்சித் தலைவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர்.**

இந்திய மக்களுடனோ அல்லது எம்.பி.க்களுடனோ கலந்தாலோசிக்காமல், புதிய நாடாளுமன்றக் கட்டிடம், கட்டப்பட்டுள்ளதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது. முதல் பெண் பழங்குடியினத்தைச் சேர்ந்த குடியரசுத் தலைவர் என கொண்டாடிக் கொண்டு, மறுபுறம் அவரை முற்றிலுமாக ஒதுக்கி வைத்துவிட்டு, புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தை தானே திறந்து வைக்கும் பிரதமர் மோடியின் முடிவு, ஜனநாயகத்தின் மீதான நேரடித் தாக்குதல் என விமர்சிக்கப்பட்டுள்ளது.

குடியரசுத்தலைவர் இல்லாமல் நாடாளுமன்றம் இயங்க முடியாத நிலையில், அவர் இல்லாமலேயே புதிய நாடாளுமன்றக் கட்டிடத்தை திறந்து வைக்கும் பிரதமர் மோடியின் முடிவு கண்ணியமற்ற செயல் என்றும், குடியரசுத்தலைவரின் உயர் பதவியை அவமதிக்கும் செயல் என்றும் கண்டனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இப்படி நாடாளுமன்றத்தில் இருந்து ஜனநாயகத்தின் ஆன்மா பறிக்கப்பட்டுவிட்ட நிலையில், புதிய கட்டடத்திற்கு மதிப்பில்லை என்றும், இதனால் புதிய நாடாளுமன்ற கட்டட திறப்பு விழாவை புறக்கணிப்பதாக எதிர்க்கட்சிகள் கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

இது அரசியலமைப்புச் சட்டத்தை மீறும் செயல். பிரதமர் மோடிக்குப் பதிலாக நாடாளுமன்றத்தின் தலைவராக இருக்கும் குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு புதிய நாடாளுமன்றக் கட்டடத்தை திறக்க வேண்டும். அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று அதில் குறிப்பிட்டுள்ளனர்.

தி.மு.க. காங்கிரஸ், திரிணாமுல் காங்கிரஸ் (டி.எம்.சி.), ஐக்கிய ஜனதா தளம், ஆம் ஆத்மி கட்சி (ஏ.ஏ.பி.), தேசியவாத காங்கிரஸ் கட்சி (என்.சி.பி.), சிவசேனா (உத்தவ் பாலாசாகேப் தாக்கரே), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்), சமாஜ்வாதி கட்சி (எஸ்.பி.), ராஷ்ட்ரிய ஜனதா தளம் (ஆர்.ஜே.டி.), இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (சி.பி.ஐ.), முஸ்லிம் லீக், ஜார்கண்ட் முக்தி மோர்ச்சா (ஜே.எம்.எம்.), தேசிய மாநாடு, தி. கேரள காங்கிரஸ் (எம்.), புரட்சிகர சோசலிஸ்ட் கட்சி (ஆர்.எஸ்.பி.), மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம் (எம்.டி.எம்.கே.), விடுதலைச் சிறுத்தைகள் கட்சி (வி.சி.கே.), மற்றும் ராஷ்ட்ரிய லோக் தளம் (ஆர்.எல்.டி.) ஆகிய கட்சிகள் விழாவை புறக்கணிப்பதாக 19 எதிர்க் கட்சித் தலைவர்கள் கூறியுள்ளனர்.

2020 டிசம்பரில் புதிய நாடாளுமன்றக் கட்டடத்தின் அடிக்கல் நாட்டு விழாவையும் காங்கிரஸ் மற்றும் பல எதிர்க்கட்சிகள் புறக்கணித்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.